செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 373 நாள்:23/6/17

**வேலூர் மாவட்ட விவசாயிகள், பொதுமக்கள் மற்றும் மண்பாண்ட தொழிலாளர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு !**

**அரசு புறம்போக்கு ஏரி, குளம், குட்டைகளிலிருந்து மண், வண்டல் மண், சவுடு, கிராவல், ஏனையவை இலவசமாக எடுக்க மனுக்களை அளித்து அனுமதியினை பெற்றுக்கொள்ளலாம் !!**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் அறிவிப்பு.**

தமிழ்நாடு அரசு பொது மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு அவர்களின் சொந்த நோக்கத்திற்காகவும், மண்பாண்டம் செய்பவும் விவசாய நிலங்கள் சமம்படுத்தும் நோக்கத்திற்காகவும் அரசாணை எண்.233(எம்.எம்.சி.2) தொழில்துறை நாள்:23.09.2015-ன்படி 1959-ம் வருடத்திய தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிகளில் விதி எண்.12(2), 12(2-A) (a) மற்றும் அரசாணை எண்.50 தொழில்துறை நாள்: 27.04.2017 ஆகியவற்றில் வகுத்துள்ள வழிமுறைகளின்படி வேலூர் மாவட்டத்தில் பொதுப்பணித்துறை மற்றும் ஊரக வளர்ச்சி துறை பராமரிப்பில் உள்ள ஏரி, குளம், குட்டைகள் ஆகியவற்றில் மண்/வண்டல் மண்/சவுடு/ ஏனையவை எடுக்க தகுதி வாய்ந்த ஏரி/குளம்/ குட்டைகளின் பட்டியல்கள் அனைத்து வட்டாட்சியர்கள்/ பொதுப்பணித்துறை மற்றும் ஊரக வளர்ச்சி துறையிடமிருந்து பெறப்பட்டு 974 ஏரி / குளம் / குட்டைகளியிருந்து மண் / வண்டல் மண் / சவுடு ஏனையவை எடுக்க தகுதி வாய்ந்தவை என கண்டறியப்பட்டுள்ளது.

மேற்படி ஏரி/குளம்/குட்டைகளிலிருந்து பொது மக்கள்/மண்பாண்டம் செய்பவர்கள் /விவசாயிகள் விவசாய தேவைகளுக்காக நஞ்சை நிலமாக இருந்தால் 75 க.மீ அல்லது 12.5 லாரிகள் 1 ஏக்கருக்கும், 185 க.மீ அல்லது 30.8 லாரிகள் 1 ஹெக்டேருக்கும் மற்றும் புஞ்சை நிலமாக இருந்தால் 90 க.மீ அல்லது 15 லாரிகள் 1 ஏக்கருக்கும், 222 க.மீ அல்லது 37 லாரிகள் 1ஹெக்டருக்கும் 2 வருடங்களுக்கு ஒருமுறை மட்டும் எந்தவித கட்டணமும் செலுத்தாமல் மண் / வண்டல் மண்/ சவுடு /ஏனையவை எடுத்துக் கொள்ளலாம். மேலும் பொதுமக்களுக்கு தங்கள் சொந்த தேவைகளுக்காக 30 க.மீ அல்லது 5 லாரிகள் எடுத்துக்கொள்ளலாம். மேலும் மண்பாண்ட தொழிலாளர்கள் மண் பானை செய்வதற்கு 60 க.மீ அல்லது 10 லாரிகள் அளவிற்கு எடுத்துக்கொள்ளலாம்.

12.06.2017 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் கூட்டம் நடத்தப்பட்டது. அக்கூட்டத்தில் பொதுதேவை / விவசாயதேவை / மண்பாண்ட தேவைகளுக்கு பொது மக்கள் தங்கள் கிராமத்தில் / அருகில் உள்ள கிராமத்தில் அமைந்துள்ள அறிக்கை செய்யப்பட்டுள்ள ஏரி/ குளம்/ குட்டைகளில் இலவசமாக மேலே குறிப்பிடப்பட்டுள்ள அளவு மண் எடுத்து பயன்படுத்திக்கொள்ள மூன்று முறை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை பயன்பெறாத விவசாயிகள் தங்கள் கிராமத்தில்/அருகிலுள்ள கிராமத்தில் அமைந்துள்ள அறிக்கை செய்யப்பட்டுள்ள குளத்தில் இலவசமாக மேலே குறிப்பிடப்பட்டுள்ள அளவு மண் எடுத்து பயன்படுத்திக்கொள்ள சம்மந்தப்பட்ட உதவி வேளாண்மை துறை அலுவலர்கள் மற்றும் வட்டாட்சியர் மூலமாக விண்ணப்பங்களை சமர்ப்பித்து தகுதி வாய்ந்த பொதுமக்கள் /விவசாயிகள்/ மண்பாண்ட தொழிலாளர்கள் ஆகியோர்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களை சம்மந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர்களை கொண்டு கிராம கணக்குகளுடன் சரிபார்த்து தகுதியான விண்ணப்பங்களை மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது. மேலும் 27.05.2017-க்கு பிறகு வரபெற்ற மனுக்களும் பரிசீலித்து அனுமதி வழங்கப்படும்.

இதுவரை மண் எடுத்து பயன்படுத்தாத விவசாயிகள் வட்டாட்சியர் அலுவலகத்திலோ அல்லது உதவி வேளாண்மை அலுவலரிடமோ கிராம கணக்குகளுடன் விண்ணப்பித்து மண் எடுக்க உத்தரவை பெற்று பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(Sd)xxxxxxxx(14.06.2017)
மாவட்ட ஆட்சித்தலைவர்
வேலூர்.

// உத்தரவு படி //

14/6/17
மாவட்ட ஆட்சித்தலைவருக்காக

23/6/17

14/6/17

செ.ம.தொ.அ.
வேலூர்- 9.